# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, சீகிரியா மரபுரிமை மன்றச் சட்டம்

---

(1998, திசெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 17.75 தபாற் செலவு : ரூபா 5.25

# 1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, சீகிரியா மரபுரிமை மன்றச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 82/ 96

**சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தின் பண்பாட்டையும் தொல்பொருளியல் மரபுரிமையையும் அதன் சுற்றாடல்களையும் பேணிக்காப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் சீகிரியா மரபுரிமை மன்றம் என அழைக்கப்படும் மன்றமொன்றைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, சீகிரியா மரபுரிமை மன்றச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

### சீகிரியா மரபுரிமை மன்றத்தைத் தாபித்தல்

2. (1) சீகிரியா மரபுரிமை மன்றம் என அழைக்கப்பட வேண்டிய மன்றமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்). சீகிரியா மரபுரிமை மன்றத்தைத் தாபித்தல்.

(2) மன்றமானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

3. மன்றத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :— மன்றத்தின் குறிக்கோள்கள்.

(அ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தினதும் அதன் சுற்றாடல்களினதும் பண்பாட்டு, தொல்பொருளியல் மற்றும் இயற்கை மரபுரிமையைப் பேணிக்காத்தலையும், பாதுகாத்தலையும் அத்துடன் அபிவிருத்தியையும் ஊக்குவித்தல் ;

2-டீ- 049787- 1,100 (98/08)

(ஆ) இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த மக்களிடையே சீகிரியா மீதான ஆர்வத்தை ஊக்குவித்தலும் அத்துடன் சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தையும் அதன் சுற்றாடல்களையும் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும் பற்றி மக்களுக்கு அறிவூட்டுதலும்;

(இ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கும் அதன் சுற்றாடல்களுக்குமான அணுகுவழிக்கும் அவற்றிற்கான வசதிகளுக்கும் அத்துடன் அவற்றின் மதிப்புயர்வுக்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஈ) கல்வி, இடவசதி மற்றும் மருத்துவ வசதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதன்மூலம் சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தின் சுற்றாடலில் வாழும் மக்களின் பொதுநலனை ஊக்குவித்தல் ;

(உ) யுனெஸ்கோ, ஐசீசீஆர்எம், ஐசீஓஎம்ஓஎஸ், ஐசீஓஎம் அத்துடன் ஐயுசீஎன் போன்ற சர்வதேச, உயர் தொழில் நிறுவனங்களுடன் செயற்தொடர்பு கொள்ளுதலும் இணைந்து பணியாற்றுதலும் ;

(ஊ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தையும் அதன் சுற்றாடல்களையும் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதற்கென கற்கைநெறிகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும் அத்துடன் அவற்றை நடத்துவதற்கு உதவி செய்தலும்;

(எ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தினதும் அதன் சுற்றாடலினதும் பண்பாடு, தொல்பொருளியல் மற்றும் இயற்கை மரபுரிமை பற்றிய கற்கைக்கு வசதியளிப்பதற்காக தகவல் சேவைகளை வழங்கும் கல்வி நிறுவனங்களையும், நூதனசாலைகளையும், ஆராய்ச்சி நிலையங்களையும், நூலகங்களையும் மற்றும் இடங்களையும் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றிய ஆராய்ச்சியைப் பொறுப் பேற்றலும், நிதியுதவியளித்தலும் அத்துடன் அத்தகைய ஆராய்ச்சியின் பெறுபேறுகளை வெளியிடுதலும் ;

(ஐ) மன்றத்தின் குறிக்கோள்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சஞ்சிகைகள், நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் செய்தித்தாள்கள் என்பவற்றை வெளியிடுதல் ;

(ஒ) மன்றத்தின் மேற்படி குறிக்கோள்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்களை அல்லது விடயங்களைச் செய்தல்.

மன்றத்தின் தத்துவங்கள்.

4. (1) மன்றமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையப் பின்வரும் தத்துவங்களை உடையதாயிருத்தல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாகக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளு வதற்கும், வைத்திருப்பதற்கும் அத்துடன் அத்தகைய ஆதனத்தைப் பிணிக்கும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பிற்கமைய அதனை விற்பதற்கும், ஈடு வைப்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும், கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப்ப தற்கும் ;

ஆயினும் எவ்வாறாயினும், மன்றத்தின் அசை வுள்ள ஆதனம் எதுவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி விற்கப்படுதலாகாது ;

(ஆ) மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்வதற்கும் புரிவ தற்கும் ;

(இ) பார்வையாளர்களை மன்றத்தின் ஆதனத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு அனுமதிப்பதற்கு அல்லது அத்தகைய ஏதேனும் ஆதனம் அத்தகைய பார்வையாளர்களால் பயன்படுத்தப்படுவதற்கு மத்திய பண்பாட்டு நிதியத்துடனான கலந்தாலோசனையுடன் மன்றம் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய அறவீடுகளை விதித்தல் ;

(ஈ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தினதும் அதன் சுற்றாடலினதும் அபிவிருத்திக்கென ஆட்களிட மிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து பணமாகவோ பொருளாகவோ கொடைகளை, மானியங்களை அல்லது நன்கொடைகளை பெற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(உ) தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தினதும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும், உள்ளூ ரதிகார சபைகளினதும், இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினதும் பணிப்புகளுக்கமைய சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திலும் அதன் சுற்றாடல்களிலும் மதவழிபாட்டிடங்களையும், தங்கும் இடங்களையும், பொது வசதிகளையும் தாபித்தலும், பேணுதலும் அத்துடன் அபிவிருத்தி செய்தலும் ;

(ஊ) செலாவணிப் பத்திரங்கள், காசோலைகள், கடன் உறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறேதேனும் கைமாற்றத்தகு ஆவணங்களை ஆக்குவதற்கும் வரைவதற்கும், ஏற்பதற்கும், கைமாற்றுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும் அத்துடன் ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்ப தற்கும் பேணுவதற்கும் ;

(எ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பணத்தைப் பிணையுடனோ அல்லது பிணையின்றியோ கடனெடுப்பதற்கும் ;

(ஏ) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உள்ளடங்கலாக, மன்றத்திற்குச் சொந்தமான எவையேனும் பணங்களை (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்தப் பிணையங்களில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டமுறையானதோ அந்த ஏதேனும் பிணையங்களில் முதலீடு செய்தல் அல்லது இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அத்தகைய ஏதேனும் பணத்தை முதலீடு செய்தல் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துதல் அல்லது உடனடியான செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணத்தின் ஏதேனும் பகுதியை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதல் ; அத்துடன்

(ஐ) ஆறாம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்சேர்ப்புத் திட்டங்கள்மீது உயர்தொழில் மற்றும் ஏனைய பணியாட்டொகுதியினரை நியமித்தல்.

5. மன்றமானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :— மன்றத்தின் அமைப்பு.

(அ) பதவிநிலை உறுப்பினர்கள் அதாவது —

(i) பண்பாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ;

(ii) உல்லாசப் பிரயாணம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ;

(iii) தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமை யதிபதி ;

(iv) மத்திய பண்பாட்டு நிதியத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(v) தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(vi) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ;

(vii) மாத்தளை நிருவாக மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட மாவட்டச்செயலாளர் அல்லது அவரால் எழுத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ;

(viii) மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அல்லது அவரால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ;

(ix) ஒன்பதாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பிரதம நிருவாக அலுவலர் ;

(ஆ) ஏனைய உறுப்பினர்கள் அதாவது — -

(i) தொல்பொருளியலில் பிரபல்யமடைந்த ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப் பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ;

(ii) தொல்பொருளியல் துறையில் ஆர்வம் காட்டியுள்ள ஆட்களிடையேயிருந்து. (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிநிலை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ;

(iii) மன்றத்தின் நிதியத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவை ஒப்பப்பணமாகச் செலுத்தியுள்ளவர்களும் அத்துடன் மன்றத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதைப் பொறுப்பேற்றுள்ளவர்களுமான நிறுவனம் சார்ந்த உறுப்பினர்கள் ;

(iv) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க மன்றத்தில் தங்கள் உறுப்பாண்மையைப் பெற்றுள்ள சாதாரண உறுப்பினர்களும் சீவிய உறுப்பினர்களும் ;

(இ) இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது ஒருவராவது மாத்தளை நிருவாக மாவட்டத்திலுள்ளவராகவிருத்தல் வேண்டும்.

மன்றத்தின் நிருவாகம்.

6. (1) மன்றத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமைத்துவம் அத்துடன் கட்டுப்பாடு என்பன மன்றத்தின் முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) சபையானது, மன்றத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக இச்சட்டத்தினால் மன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குச் சாட்டுதல் செய்யப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) அதன்பொருட்டு ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்தையும், வேலைத்திட்டத்தையும், ஆண்டு வரவு செலவுத்திட்டத்தையும் தயாரித்தலும் அத்துடன் அத்தகைய திட்டத்தையும், நிகழ்ச்சித்திட்டத்தையும், ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமா்ப்பித்தலும் சபையின் கடமையாதல் வேண்டும்.

சபையின் அமைப்பு.

7. (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பிரிவு 5 இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மன்றத்தின் பதவிநிலை உறுப்பினர்கள் ;

(ஆ) ஏனைய உறுப்பினர்கள், அதாவது –

(i) பிரிவு 5 இன் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மன்றத்தின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர் ;

(ii) பிரிவு 5 இன் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மன்றத்தின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருவர் ;

(iii) சீவிய உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட மன்றத்தின் சீவிய உறுப்பினர் ஒருவர் ;

(iv) சாதாரண உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட மன்றத்தின் சாதாரண உறுப்பினர் ஒருவர் ;

(v) மன்றத்தின் நிறுவன உறுப்பினர்களிடையேயிருந்து மன்றத்தின் பதவிவழி உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படும் மன்றத்தின் எட்டு நிறுவன உறுப்பினர்கள்.

(2) ஆளொருவர், அவர், பாராளுமன்றத்தின், மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால், சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்குத் தகைமை இழந்தவராதல் வேண்டும்.

(3) சபைக்கு, அதன் கூட்டங்களை மற்றும் அத்தகைய கூட்டங்களிலான அனுபவங்களைக் கொண்டுநடாத்துவது தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

(4) சபையானது, ஆண்டொன்றுக்கு ஆகக்குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது நடாத்துதல் வேண்டும்.

(5) (அ) சபையின் உறுப்பினர்கள், முறையே சபையின் தவிசாளராக, துணைத்தவிசாளராக அத்துடன் செயலாளராக இருப்பதற்கென அவர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வில் எது எப்படியிருப்பினும், சபையின் முதலாவது தவிசாளராக, தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி இருத்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது தவிசாளர், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கணிக்கப்படும் ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக் குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஈ) தவிசாளர் அல்லது துணைத்தவிசாளர், சுகவீனம் அல்லது வேறு இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாமல் இருக்கின்றவிடத்து, சபையின் உறுப்பினர்கள், அவரின் இடத்துக்குச் சபையின் இன்னோர் உறுப்பினரைத் தெரிவுசெய்யலாம்.

(உ) பந்தி (ஆ) வின்கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது பதவிவழித் தவிசாளர் தவிர்ந்த தவிசாளர் அல்லது துணைத்தவிசாளர், சபைக்கு முகவரியிடப்படும் கடிதத்தின் மூலம் அவர்களுடைய முறையான பதவிகளிலிருந்து விலகலாம்.

(ஊ) பந்திகள் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க, சபையில் அவரவர்களின் உறுப்பாண்மைக் காலப்பகுதியே, தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளர் ஆகியோரின் பதவிக்காலமாக இருத்தல் வேண்டும்.

(6) ஏழாம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்தியின் கீழ்த்தெரிவு செய்யப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர், சபைக்கு அதற்கென முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(7) ஏழாம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்தியின் கீழ்த்தெரிவு செய்யப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய உறுப்பினரைத் தெரிவுசெய்கின்ற ஆட்கள் குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(8) ஆறாம், (7) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, 7 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பிரிவின் கீழ்த்தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(9) ஏழாம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பிரிவின் கீழ்த்தெரிவு செய்யப்பட்ட சபையின் உறுப்பினர் எவரும், இறக்கின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து விலகுகின்றவிடத்து அல்லது அகற்றப்படுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினரைத் தெரிவுசெய்கின்ற ஆட்கள் குழுவானது, இறக்கின்ற, பதவியிலிருந்து விலகுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற உறுப்பினரின் இடத்தில் உறுப்பினர் ஒருவராகவிருப்பதற்கென இன்னோர் ஆளைத் தெரிவு செய்யலாம்.

(10) ஏழாம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்தியின் கீழ்த்தெரிவுசெய்யப்பட்ட சபையின் உறுப்பினர் எவரும், சுகவீனம் அல்லது வேறு இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவியின் கடமையைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாமலிருக்கின்ற விடத்து, அத்தகைய உறுப்பினரைத் தெரிவுசெய்கின்ற ஆட்கள் குழுவானது, அவரின் இடத்தில் பதிற்கடமைபுரிவதற்கென இன்னோர் ஆளைத் தெரிவு செய்யலாம்.

(11) ஒன்பதாம் அல்லது (10) ஆம் உட்பிரிவின்கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், தமது பதவியிலிருந்து முன்னரே விலகினாலொழிய அல்லது தமது பதவியை இறப்பு அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னரே வறிதாக்கினாலொழிய, அவர் எந்த உறுப்பினரை யடுத்து வருகின்றாரோ, அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சி யுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(12) ஏழாம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் அல்லது (iv) ஆம் அல்லது (v) ஆம் உட்பந்தியின் கீழ்த்தெரிவு செய்யப்பட்டு தமது பதவியை வறிதாக்குகின்றவருமான சபையின் உறுப்பினர் எவரும், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(13) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் எப்பதவியைக் கொண்டிருப்பதன் பயன் காரணமாகச் சபையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ, அப் பதவியை அவர் வகிக்கின்ற காலம் வரைக்கும் பதவி வகித்தல் வேண்டும்.

(14) சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடம் எதுவும் இருக்கின்ற காரணத்தால் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் அல்லது உறுப்பினர் எவரும் தெரிவுசெய்யப்படுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தால் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் வலுவுடையதற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(15) தவிசாளர் அல்லது அவர் இல்லாதிருக்கின்றபோது துணைத்தவிசாளர் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளர் ஆகிய இருவரும் வருகைதராதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத் துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(16) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட வேண்டியதான எல்லா வினாக்களும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் தவிசாளருக்கு அல்லது சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் வேறு எவரேனும் உறுப்பினருக்கு அவரது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

மன்றத்தின் இலச்சினை.

8. மன்றத்தின் இலச்சினையானது — -

(அ) காலத்துக்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அங்கீகாரமில்லாமலும் 9 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாக அலுவலரினதும், சபையின் பிரதான உறுப்பினர் ஒருவரினதும் சமுகத்தில் தவிரவும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத் தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக ஆவணத் தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

## மன்றத்தின் பிரதான நிருவாக அலுவலரினதும் பணியாட்டொகுதியினதும் நியமனம்

மன்றத்தின் பிரதான நிருவாக அலுவலரை நியமித்தல்.

9. (1) சபையானது, (இதனகத்துப்பின்னர் "நிருவாக அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரதான நிருவாக அலுவலராக இருப்பதற்கென ஆளொருவரை மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும். அவர் மன்றத்தின் பிரதம நிருவாக அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், மன்றத்தின் முழுநேர அலுவலர் ஒருவராக இருத்தலும் வேண்டும். நிருவாக அலுவலர் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்கீழ் வேலைக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் நிருவாக அலுவலரின் பதவியில் வெற்றிடம் எதுவும் ஏற்பட்டால் அல்லது நிருவாக அலுவலர் சுகவீனம், லீவு அல்லது வேறு இயலாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருந்தால், சபையானது அப்பதவியின் கடமைகளைப் புரிவதற்குப் பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கைச் செய்தல் வேண்டும்.

(3) நிருவாக அலுவலருக்கு, சபையின் பணிப்புக்கு அமைய, மன்றத்தின் அலுவலர்களின் நிருவாகம் மற்றும் பணியாட்டொகுதியினர் மீதான கட்டுப்பாடு ஆகிய பொறுப்புக்கள் இருத்தல் வேண்டும். சபையின் எல்லா முடிவுகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் அவருக்கு இருத்தல் வேண்டும்.

(4) நிருவாக அலுவலர் சபையின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கூட்டத்தில் சமுகமளித்துப் பேசுவதற்கு உரித்துடையவராகவிருத்தல் வேண்டும்.

(5) சபையானது, நிருவாக அலுவலரை —

(அ) தமது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக ஆற்றலற்றவராக அவர் வந்தால் ; அல்லது

(ஆ) அவரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம் மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மை கொண்டதென அல்லது மன்றத்தின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியதெனச் சபை அபிப்பிராயப்பட்டால் ; அல்லது

(இ) சபையின் பணிப்புகளுக்கு முரணாக அவர் செயலாற்றினால்,

பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) நிருவாக அலுவலரின் பதவி, அப்பதவியை வகிக்கின்றவர் இறப்பதன்மேல், (5) ஆம் உட்பிரிவின்கீழ் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அதற்கெனச் சபைக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் பதவியிலிருந்து விலகியதன்மேல், வறிதாதல் வேண்டும்.

மன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும்.

**10.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் விதிகளுக்கும் அமைய, மன்றத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கான தத்துவத்தைச் சபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம் ஒவ்வொன்றும் ஆட்சேர்த்தலுக்கான செயற்றிட்டங்களுக்கும், நியமனங்களுக்கென விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்க சபையினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கும் அமைய, மன்றமானது, அதன் அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் சேவை பற்றிய நியதிகளையும், நிபந்தனைகளையும், அவர்களுடைய வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் வேறு ஊதியம் உட்படத் தீர்மானித்தல் வேண்டும்.

(4) மன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும், வேலையிலிருந்து நீக்கும் தத்துவம் உட்பட சபையினது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவர்களாக இருத்தல் வேண்டும். ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பில் சபையானது விதிகளை ஆக்கலாம்.

(5) சபையானது, மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைகருதி சகாய நிதியங்களையும், செயற்றிட்டங்களையும் தாபிக்கலாம் ; அத்துடன் ஒழுங்குபடுத்தலாம் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகளை வழங்கலாம்.

*குறித்தசில ஒப்பந்தங்களின் நோக்கத்துக்காக மன்றத்துக்கு ஆற்றப்படும் சேவை அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல்.*

**11.** அரசாங்கத்தோடு செய்துகொள்ளப்பட்ட எவ்வொப்பந்தம் ஒன்றின் மூலம் அரசாங்கத்துக்குக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் சேவைபுரிவதற்கு ஆளெவரும் உடன்பட்டிருக்கின்றாரோ அவ்வாளை மன்றம் வேலைக்கு அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் மன்றத்துக்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதி எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மன்றத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**12.** (1) சபையின் வேண்டுகோளின் பெயரில், பகிரங்க சேவையில் உள்ளவரும் அமைச்சரின் அமைச்சின்கீழ் வருகின்ற ஏதேனும் நிறுவனத்தில் அல்லது திணைக்களத்தில் சேவையாற்றுகின்றவருமான எவரேனும் அலுவலர், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினாலும் அவ்வலுவலரினாலும் கொடுக்கப்படும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மன்றத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் வேண்டுகோளின் பேரில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அலுவலர் தவிர்ந்த பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மன்றத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது, அதேபோன்ற சம்மதத்துடன் மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் மன்றத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின் பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அத்துடன் அவ்வுயர்கல்வி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) இப்பிரிவின் "உயர்கல்வி நிறுவனம்" அத்துடன் "பிரதம நிறைவேற்று அலுவலர்" என்னும் சொல்லமைப்புகள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்திலுள்ள அதே பொருள்களைக் கொண்டிருக்கின்றன என்பதுடன் "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனவும் பொருள்படும்.

## பாகம் III

### நிதி

மன்றத்தின் நிதியம்.

13. (1) மன்றமானது, தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" என அழைக்கவும் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) பின்வருவன மன்றத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) மன்றமானது, அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும் அத்துடன் புரிகையிலும், அதனால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இலங்கையிலிருந்தாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்தாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வாயிலாக மன்றத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்தின் வருடாந்த பராமரிப்புச் செலவைச் சமாளிப்பதற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) மத்திய கலாச்சார நிதியத்தினால் நிதியத்திற்குக் கைமாற்றப்பட்டதும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதுமான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் —

(i) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கு அனுமதிப்பதற்காக உள்ளூர் விருந்தினர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டண விதிப்பனவிலிருந்து மத்திய கலாச்சார நிதியத்தில் பெறப்பட்ட முழு வருமானம் ;

(ii) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கு அனுமதிப்பதற்காக உல்லாசப்பயணிகளிடமிருந்து அறவிடப்பட்ட கட்டண விதிப்பனவிலிருந்து, இச்சட்டம் தொடங்கும் தேதியன்று தொடங்கி, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாவது ஆண்டின் கடைசி நாளன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கென, மத்திய கலாச்சார நிதியத்தினால் பெறப்பட்ட வருமானத்தின் இருபத்தைந்து சதவிகிதம் ;

(iii) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கு அனுமதிப்பதற்காக உல்லாசப்பயணிகளிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணவிதிப்பனவிலிருந்து, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறாவது ஆண்டின் முதல் நாளன்று தொடங்கி, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட பத்தாவது ஆண்டின் கடைசி நாளன்று முடிவடைகின்ற ஐந்து வருட காலப்பகுதியின்போது, மத்திய கலாச்சார நிதியத்தால் பெறப்பட்ட வருமானத்தின் முப்பத்தைந்து சதவிகிதம் ; அத்துடன்

(iv) சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கு அனுமதிப்பதற்காக உல்லாசப் பயணிகளிடமிருந்து அறவிடப்பட்ட கட்டண விதிப்பனவிலிருந்து, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட பத்து வருடம் முடிந்ததன் பின்னரான ஏதேனும் காலப் பகுதிக்கு, மத்திய கலாச்சார நிதியத்தால் பெறப்பட்ட வருமானத்தின் ஐம்பது சதவிகிதம்.

(3) பின்வருவன மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) இச்சட்டத்தின்கீழ் மன்றத்தின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் மன்றத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ், அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய கலாசார நிதியச் சட்டத்திற்கான திருத்தம்.

14. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், சீகிரியா உலக மரபுரிமைத் தலத்திற்கான விருந்தினர்கள் மற்றும் உல்லாசப் பயணிகளிடமிருந்தான கட்டண அறவீட்டிலிருந்து மத்திய கலாச்சார நிதியத்தால் பெறப்பட்ட வருமானமானது, 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நியதிகளின்படி நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

சபை செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல்.

15. (1) சபையானது, மன்றத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை மன்றத்தின் கணக்குகளில் கணக்காய்விற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) மன்றத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

அமைச்சரானவர் வரிக்கொடுப்பனவிலிருந்து மன்றத்துக்கு விலக்களித்தல்.

16. (1) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன், மன்றத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பொருட்கள்மீது, அத்தகைய பொருட்களின் இறக்குமதியானது, மன்றத்தின் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற்கு உசிதமானதெனக் கருதப்படின், ஏதேனும் சுங்கத்தீர்வையின் கொடுப்பனவிலிருந்து மன்றத்திற்கு விலக்களித்தல் வேண்டும்.

(2) மன்றமானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும்.

(3) மன்றத்திற்கு எவரேனும் ஆளினால் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட நன்கொடையொன்று, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்குப் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட நன்கொடையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மன்றமானது, பொழுதுபோக்கு வரிக்கட்டளைச் சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட ஏதேனும் பொழுதுபோக்கு வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது

சபை தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

**17.** அமைச்சரானவர், மன்றத்தின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் அத்துடன் கடமைகள் புரியப்படுதல் தொடர்பில், காலத்துக்குக்காலம் சபைக்கு எழுத்தில் அத்தகைய பொதுவான அல்லது விசேட பணிப்புகளை வழங்கலாம்.

அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனம் மன்றத்திற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

**18.** (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் மன்றத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுகின்றவாறான, அமைச்சரில் அமைச்சுக்குரிய அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை மன்றத்திற்கு மாற்றலாம் என்பதுடன், அவ்வாறு மாற்றப்பட ஏற்படும் ஆதனமானது, அத்தகைய கட்டளையின் தேதியிலிருந்து மன்றத்திற்கு உரித்தாதலும் அத்துடன் மன்றத்தின் ஆதனமாக வருதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அரச காணி, அப்போதைக்கு அரச காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, மன்றத்தின் ஏதேனும் நோக்கத்திற்காக மன்றத்தின் பயன்பாட்டிற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்படலாம் அல்லது மன்றத்திற்குப் பராதீனப்படுத்தப்படலாம்.

(3) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் மன்றத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் ஆட்சியுடைமையையும் பயன்பாட்டையும் மன்றத்திற்குக் கைமாற்றலாம் அத்துடன் உரித்துமாக்கலாம் ;

ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய ஆதனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாடின்றி அசைவுள்ள அரச ஆதனம் எதனையும் பாதிக்கும் கட்டளையெதுவும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

சபையின் அறிக்கை பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப் படுதல்.

19. சபையானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த தன்பின்னர் ஆறுமாத காலப்பகுதியொன்றிற்குள் அவ்வாண்டின்போதான மன்றத்தின் செயற்பாடுகள் பற்றிய முழு விவரத்தைக் கொடுக்கும் அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர், அவ்வறிக்கை எந்த ஆண்டு தொடர்பிலானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அவ்வறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

மன்றம், இலஞ்சச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

20. மன்றம், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

சபையின் உறுப் பினர்களும் மன் றத்தின் அலுவலர் களும் சேவையாளர் களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

21. மன்றத்தின் எல்லா உறுப்பினர்களும், அத்துடன் மன்றத்தின் அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.

22. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் உறுப்பினர் அல்லது மன்றத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட செயல் எதற்காகவும் அவருக்கெதிராக அமைதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் மன்றத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மன்றத்தினால் உறப்படும் செலவெதுவும் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மன்றத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது மன்றத்தால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் மன்றத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அத்தகைய செலவானது, அறவிடப்பட்டாலொழிய, மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

23. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சபை பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றின் எவையேனும் கருமங்களுக்காகவும் அத்துடன் அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் : விதிகள்.

(அ) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஊதியம் உட்பட சேவை நியதி, நிபந்தனைகள் ;

(ஆ) மன்றத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஆட்சேர்க்கும் செயற்றிட்டம் அத்துடன் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைமுறை ;

(இ) மன்றத்தின் ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் வேலைத்திட்டங்கள், வருடாந்த வர்வுசெலவுத்திட்டம், வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அத்துடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள், வேலைத்திட்டங்கள், வரவுசெலவுத்திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் என்பன தயாரிக்கப்படும் முறை ; அத்துடன்

(ஈ) மன்றத்தின் சாதாரண மற்றும் சீவிய உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய முறை ;

(உ) ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ, அத்தகைய வேறு கருமங்கள்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**25.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய —

"மத்திய கலாச்சார நிதியம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய கலாச்சார நிதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய கலாச்சார நிதியம் என்று பொருள்படும் ;

"இலங்கை உல்லாசப்பயணச் சபை" என்பது, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பயணச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பயணச் சபை என்று பொருள்படும் ;

"ஐசீசீஆர்ஓஎம்" என்பது, கலாச்சார ஆதனத்தைப் பேணுதலும் மீளப் புதுப்பித்தலும் பற்றிய கற்கைக்கான, ரோம், சர்வதேச நிலையம் என்று பொருள்படும் ;

"ஐசீஓஎம்ஓஎஸ்" என்பது, புராதனச் சின்னங்களும் தலங்களும் பற்றிய சர்வதேச பேரவை என்று பொருள்படும் ;

"ஐசீஓஎம்" என்பது, அரும்பொருட்சாலை சர்வதேசப் பேரவை என்று பொருள்படும் ;

"நிறுவன உறுப்பினர்" என்பது, மன்றத்தின் நிதியத்திற்கு ஒரு தொகைப்பணமாக ஒரு மில்லியன் ரூபா உதவுதொகையை வழங்கியுள்ள நிறுவனம் அல்லது ஆள் ஒருவர் என்று பொருள்படும் ;

"ஐயூசீஎன்" என்பது, இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் என்று பொருள்படும் ;

"சீவிய உறுப்பினர்" என்பது, சீகிரியாவின் நண்பர்கள் என அழைக்கப்படும் சங்கத்தின் சீவிய உறுப்பினர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, அல்லது பிரதேசசபை என்று பொருள் படும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய சபையினால் அல்லது சபாவினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களை, கடமைகளை, பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"சாதாரண உறுப்பினர்" என்பது, 'சீகிரியாவின் நண்பர்கள்' என அழைக்கப்படும் சங்கத்தின் சாதாரண உறுப்பினர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் xvii அ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருள்படும் ;

"சீகிரியா உலக மரபுரிமைத் தலம்" என்பது, 21.03.1952 ஆம் தேதிய 10370 ஆம் இலக்க, கசெற்றில் வெளியிடப்பட்டதும் தொல்பொருட் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான அறிவித்தல்மூலம் தொல்பொருளியல் ஒதுக்கம் ஒன்றென வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பு என்றும் அத்துடன் 27.01.1989 ஆம் தேதிய 542/10 ஆம் இலக்க, கசெற்றில் வெளியிடப்பட்டதும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைமூலம் அபிவிருத்தி இடப்பரப்பு ஒன்றென வெளிப்படுத்தப்பட்டதுமான இடப்பரப்பு என்றும் பொருள்படும் ;

"யுனெஸ்கோ" என்பது, ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சார ஒழுங்கமைப்பு என்று பொருள் படும் ;

"நகர அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருள்படும்.